அரசு வளாகத்தை உருவாக்கி, அந்த இடத்திலேயே சார் பதிவாளர் அலுவலகத்தையும் அமைத்து, பொதுமக்களுடைய நீண்டநாள் எதிர்பார்ப்பினை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தலைமையில் நடைபெறும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், சோழிங்கநல்லூர் தொகுதியில் மிகவும் அதிகப்படியான வளர்ச்சிப் பணிகள் நடைபெறுகின்றன என்பதற்குச் சான்றாக அந்த ஒருங்கிணைந்த அரசு வளாகத்திற்குள்ளேயே சார் பதிவாளர் அலுவலகத்தையும் கொண்டு வரவேண்டுமென்று பணிவோடு கேட்டு, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி பேரூராட்சி, துப்புரவு மேற்பார்வையாளர் உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி பேரூராட்சி, துப்புரவு மேற்பார்வையாளர் இறந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள், திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள், திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள், திரு. ப. தனபால் அவர்கள், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக திரு. தி. வேல்முருகன் அவர்கள், விடுதலை சிறுத்தைகள் கட்சி

2023 மார்ச் 24] [பேரவைத் தலைவர்]

சார்பாக திரு. S.S. பாலாஜி அவர்கள் ஆகியோர் பேரவை விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து கட்சிக்கு ஒருவர், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.

முற்பகல் 11-05

திரு. கடம்பூர் ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி பேரூராட்சியில் துப்புரவுப் பணியாளராக பணியாற்றி வந்த திரு. சுடலை மாடன் என்பவருக்கு மேற்பார்வைப் பணியாளராக பதவி உயர்வு கிடைத்தது. அதே இடத்தில் அவர் தொடர்ந்து பணியாற்ற பேரூராட்சி தலைவி சமீரா அவர்கள் அவரிடம் பணம் கேட்டு மிரட்டியதோடு மட்டுமல்லாமல், தகாத ஆபாச வார்த்தைகளால் பேசியுள்ளார். இதனால் மனம் உடைந்த திரு. சுடலை மாடன் அவர்கள், விஷம் அருந்தி, தற்கொலைக்கு முயற்சி செய்து, தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி 23-3-2023 அன்று அதிகாலையில் மரணமடைந்துள்ளார். எனவே, அவரை தற்கொலை செய்யத் தூண்டிய பேரூராட்சித் தலைவி சமீரா மற்றும் செயல் அலுவலர் பாபு ஆகியோர்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட நபரின் குடும்பத்தாருக்கு ரூ.1.00 கோடி நஷ்ட ஈடு வழங்க வேண்டும் எனவும், அவர்தம் குடும்ப உறுப்பினரில் ஒருவருக்கு கல்வித் தகுதிக்கேற்ப அரசு வேலை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும் விவாதிக்க அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி, புதுக் காலனியைச் சேர்ந்த திரு. சுடலை மாடன் என்பவர் தூய்மைப் பணியாளராகப் பணியாற்றி வந்திருக்கிறார். மேஸ்திரி வேலை பார்ப்பதற்காக அவரிடம் கையூட்டு கேட்டதாகவும், அதனால் அவர் விஷம் குடித்து 17 ஆம் தேதியன்று மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, பின்னர், நேற்றையதினம்*

இறந்ததாகவும் தகவல் வரப்பெற்றுள்ளது. 'எதை விதைக்கிறார்களோ அதை அறுவடை செய்துதான் ஆக வேண்டும்' என்று நான் ஏற்கெனவே பலமுறை சொல்லியிருக்கிறேன். தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்சி பேதம் பார்க்காமல், ஆள் பேதம் பார்க்காமல், உடனடியாக நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். தற்போது, குறிப்பிடப்பட்ட அந்த செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சித் தலைவர் இருவரும் தலைமறைவாக இருப்பதாகவும், குலசேகரப்பட்டின காவல் துறை ஆய்வாளர் வழக்குப் பதிவு செய்திருப்பதாகவும், அவர்களைத் தேடிவருவதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. இனிவரும் காலங்களில், இப்படிப்பட்ட நிகழ்வு நடக்காமல், காவல் துறையும், துறை சார்ந்த அதிகாரிகளும் பாதுகாக்க வேண்டும். இதற்கெல்லாம் காரணம் தூய்மைப் பணியாளர் வாரியம் தமிழ்நாட்டில் அமைக்கப்படவில்லை என்பதுதான் நாடு முழுவதிலும், 11 மாநிலங்களில்தான் தூய்மைப் பணியாளர் வாரியம் இருக்கிறது. தமிழகத்திலும் தூய்மைப் பணியாளர் வாரியத்தை அரசு ஏற்படுத்த வேண்டும். அதன்மூலம் இவற்றைக் கண்காணிக்க வேண்டும். அனைவருக்கும் சமநீதி என்ற அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்; அது பாராட்டுக்குரியது. பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பத்தினருக்கு வேலைவாய்ப்பும், உரிய நிவாரணத் தொகையும் வழங்க வேண்டுமென்று நான் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி பேரூராட்சியைச் சேர்ந்த துப்புரவு மேற்பார்வையாளர் திரு. சுடலை மாடன் அவர்கள் தற்கொலை செய்துகொண்டது குறித்து இந்த அரசின் கவனத்தை ஈர்க்கின்ற அதே வேளையில், ஏற்கெனவே, என் கட்சியின் உறுப்பினர்களாக இருந்த சென்னை மாநகராட்சியில் பணியாற்றிய இரண்டு துப்புரவுப் பணியாளர்கள் விஷ வாயு தாக்கி இறந்திருக்கிறார்கள். அப்போது பாதிக்கப்பட்ட குடும்பத்தை அழைத்துச் சென்று, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களை அன்போடு அரவணைத்து, உபசரித்து, அவர்களுக்கான உதவிகளையும் செய்து, நிவாரணத் தொகைகளையும் வழங்கினார்கள். அவர்களுக்கான

2023 மார்ச் 24] [திரு. தி. வேல்முருகன்]

வேலைவாய்ப்பினையும் வழங்க வேண்டுமென்று கேட்டேன். இதுவரையிலும் வழங்கப்படவில்லை. அவர்களது சொந்த மாவட்டம், திருவாரூர் மாவட்டம். இதுபோன்று துப்புரவுப் பணியாளர் இறக்க நேரிட்டாலோ அல்லது தற்கொலை செய்துகொண்டாலோ, அந்த குடும்பங்களின் ஏழ்மை நிலையைக் கருத்திற்கொண்டு, அவர்கள் குடும்பத்தாருக்கான வேலைவாய்ப்பினை உறுதி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித சமூகத்திற்கு மிக அடிப்படையான பணிகளைச் செய்யக்கூடிய தூய்மைப் பணியாளர்கள், விருப்பத்தின் அடிப்படையில் அல்லாமல், சமூகக் கட்டமைப்பின் அடிப்படையில் இந்தப் பணியில் ஈடுபடுகிறார்கள். அதனால்தான், மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தன்னுடைய ஆட்சிக் காலத்தில், தூய்மைப் பணியாளர் நல வாரியத்தை அமைத்திருந்தார்கள். அவர் வழியில் நடைபோடக்கூடிய இந்த ஆட்சியில், இறந்துபோன அந்தத் தூய்மைப் பணியாளருக்கு உரிய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கவனத்தை ஈர்த்து அமைகிறேன் என்று சொல்லி முடிக்கவும்.

திரு. S.S. பாலாஜி: உரிய இழப்பீட்டை வழங்க வேண்டுமென்றும், இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை உரிய வகையில் தண்டித்திட வேண்டும் என்றும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–10

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17–3–2023 அன்று காலை 6–00 மணிக்கு தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி பேரூராட்சியில் தூய்மைப் பணியாளர் வருகை, சுகாதார மேற்பார்வையாளரால் பதிவு

செய்யப்பட்டு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அப்போது, முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி ஆயிஷா கல்லாசி, தற்போதுள்ள பேரூராட்சி மன்றத் தலைவரினுடைய மாமியார் அங்கு வருகை தந்திருக்கிறார். தூய்மைப் பணியாளர் திரு. சுடலை மாடனைப் பார்த்து, 'நீ தூய்மைப் பணியைத்தான் செய்ய வேண்டுமே தவிர, வேறு பணிக்குச் செல்லக் கூடாது' என்று சொல்லியிருக்கிறார். ஆனால், மார்ச் மாத இறுதிக்குள் வரி வசூல் பணிகள் செய்யப்படுகின்ற காரணத்தினால் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் மற்றவர்களின் உதவியோடு வரி வசூல் செய்யச் சென்றுகொண்டிருந்தபோது, முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர், தற்போதைய பேரூராட்சி மன்றத் தலைவரினுடைய மாமியார், இவரை, 'நீங்கள் உடனடியாக துப்புரவுப் பணிக்குத்தான் போக வேண்டும்' என்று சொல்லியிருக்கிறார். துப்புரவுப் பணிக்கு சென்று அவர் வேலையைச் செய்துவிட்டு, அதன் காரணமாக தன்னை அவமானப்படுத்தினார்களென்று, இல்லத்திற்குச் சென்று விஷம் அருந்தியுள்ளார். விஷயம் தெரிந்தவுடன் துறையினுடைய AD, Town Panchayat அவர்கள், அங்கிருக்கின்ற Town Panchayat Executive Officer ஆகியோர் உடன் சென்று, அவரை உடன்குடி மருத்துவமனையில் சேர்த்திருக்கிறார்கள். மேல் சிகிச்சைக்காக தூத்துக்குடி பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, தீவிர சிகிச்சைப் பிரிவிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் நேரடியாகச் சென்று, அந்தப் பணியாளரைப் பார்த்து, மருத்துவர்களுக்கு தக்க அறிவுரை தந்து, நல்ல முறையிலே சிகிச்சை தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

இதற்கிடையில் தூய்மைப் பணியாளர்களும், அங்கிருக்கின்ற ஆதி தமிழர் பேரவையும் சேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். போராட்டத்தில் ஈடுபட்டபோது, நேரடியாக அதிகாரிகள் சென்று அவர்களை சமாதானம் செய்து, 'தக்க நடவடிக்கையை நிச்சயமாக எடுப்போம்' என்று சொன்ன காரணத்தால், அவர்கள் கலைந்து சென்றிருக்கிறார்கள். இந்த நிலையிலே, மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருந்த திரு. சுடலை மாடன் மறைந்துவிட்டார். உடனடியாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அங்கு நேரில் சென்று, யார்மீது குற்றம் சொன்னார்களோ, அவர்கள்மீது வழக்குப் பதிவு செய்து, முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி ஆயிஷா கல்லாசி மற்றும் உடன்குடி பேரூராட்சி அலுவலர் திரு. பாபு ஆகிய இருவர் மீதும் முதல் தகவல் அறிக்கை–FIR போடப்பட்டுள்ளது. Section 294(b),

2023 மார்ச் 24] [திரு. கே.என். நேரு]

Section 186, I.P.C Section 3/(1)(r), Section 3/1(8), The Scheduled castes and the Scheduled Tribes (Prevention of Atrocities) Act இல் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. வழக்கைப் பதிவு செய்து, அவர்களைத் தேடியிருக்கிறார்கள். அவர்கள் தலைமறைவாக இருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டு சமாதானம் செய்தபோது, 'உடனடியாக அந்தக் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வேலை தர வேண்டும்' என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், உடனடியாக குடும்பத்தில் உள்ளவர்களுடைய கல்வித் தகுதியினைப் பார்த்தபோது, அவர் nursing course படித்திருந்திருக்கிறார். எனவே, அவருடைய கல்வித் தகுதி அறிந்து, இளநிலை உதவியாளர் பதவியை உடனடியாக உடன்குடி பேரூராட்சிக்கு பக்கத்தில் உள்ள சாத்தான்குளம் பேரூராட்சி அலுவலகத்தில் தந்துவிட்டார்கள். The Scheduled castes and the Scheduled Tribes (Prevention of Atrocities) Act இல் வழக்குப் பதிவு செய்த காரணத்தால், உடனடியாக 25 ஆயிரம் ரூபாயை அவர்களது செலவிற்குக் கொடுத்து, 25 இலட்சம் ரூபாய், அவர்களுக்குத் தர வேண்டிய தொகையில் பாதித் தொகையை இப்போது தந்துவிட்டார்கள். மீதித் தொகை FIR போட்டு அவர்களைப் பிடிக்கும்போது தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, வேலையும் தரப்பட்டுவிட்டது; அதேநேரத்தில் FIR-ம் போடப்பட்டுவிட்டது. மீண்டும் இதுபோன்ற ஒரு நிகழ்ச்சி நடைபெறக் கூடாது என்பதற்காகத்தான், தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே, பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், உடனடியாக அனைத்து உதவிகளையும் செய்யச் சொல்லியிருக்கிறார்கள். மருத்துவமனையிலிருந்து உடலை பிரேதப் பரிசோதனை செய்து எடுத்துச் செல்லுமாறு கேட்டபோது, 'எடுத்துச் செல்ல முடியாது, இவற்றையெல்லாம் செய்தால்தான் எடுத்துச் செல்ல முடியும்' என்று குடும்பத்தார் சொன்னார்கள். அவர்கள் கேட்ட அனைத்தையும் செய்து கொடுத்ததால், இப்போது மருத்துவமனையிலிருந்து உடலை வீட்டிற்கு எடுத்துச் சென்றுகொண்டிருப்பதாக செய்தி வந்திருக்கிறது. எனவே, இனி இதுபோன்று நடைபெறாத அளவிற்கு அனைத்து அலுவலர்களையும், பேரூராட்சி மன்றத் தலைவர்களையும் தொடர்புகொண்டு பேசுவோம்.

[திரு. கே.என். நேரு] [2023 மார்ச் 24

மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். சென்னை மாநகரத்திலே, நிறைய கருவிகள் Chennai Metropolitan Water Supply and Sewerage Board-ல் இருக்கின்றன. அடுக்குமாடிக் குடியிருப்பில் குடியிருப்பவர்கள், அவசரம் அவசரமாக கழிவுநீர் தொட்டியைச் சுத்தம் செய்கிறோம் என்று அந்தப் பகுதியில் இருக்கின்ற அதிகாரிகளுக்குச் சொல்லாமல், அவர்களாகவே சென்று இறங்கிவிட்ட காரணத்தால்தான் விஷ வாயு தாக்கி, ஆங்காங்கு இறந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது, கழிவுநீரை எடுப்பதற்குக்கூட, அனுமதி பெற்றுத்தான் எடுத்துச் செல்ல வேண்டும் என்ற முறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைக்காட்டிலும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், * காங்கிரஸ் கட்சித் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை அவர்கள் சொல்லியது போல், டெல்லியிருந்து DICCI என்ற ஒரு பெரிய நிறுவனத்தோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டிருக்கின்றது. இதுபோன்று, தூய்மைப் பணியாளர்கள் இறந்திருந்தால், அவர்களுடைய குடும்பத்தில் உள்ளவர்களை தொழில்முனைவோர்களாக உருவாக்குவதற்கான திட்டம் தீட்டப்பட்டு, அதுவும் நடைமுறையில் வரவிருக்கிறது. எனவே, இனி இதுபோன்று நடைபெறாத அளவிற்கு சிறப்பாகச் செயல்படுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்பதற்குப் பதிலாக காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. செல்வபெருந்தகை என்று சேர்த்துக்கொள்ள வேண்டும். +2 பொதுத் தேர்வில் ஆயிரக்கணக்கான மாணவர்கள். . . (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்குத் தரப்படுகின்ற நிவாரணத் தொகை 12 இலட்சம் ரூபாய். 25 ஆயிரம் என்பதற்கு 25 இலட்சம் என்று சொல்லிவிட்டேன். முதலில் தரப்பட்ட தொகை 6 இலட்சம் ரூபாய் ஆகும்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.